அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.04/2000

எனது இல.ஏ.ஆர்/3/2/6
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு.07
2000.11.16

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபை தலைமைச் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**<u>அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளை இலத்திரனியல் அஞ்சல் (ஈ-மேல்) மூலமாக மட்டும் அனுப்புதல்.</u>**

அரச அலுவலகங்களின் தொடர்புத்துறை அலுவல்களுக்காக இலத்திரனியல் அஞ்சலை பயன்படுத்துவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

1. அரச துறையின் தொடர்பு செயற்பாட்டை துரிதப்படுத்தல்
2. அரச பணிகளுக்காக கணணி பாவிப்பை அதிகரித்தல்
3. கடிதங்களை அச்சிடுவதற்காக செய்யப்படும் செலவை குறைத்தல்
4. அதன் மூலம் உற்பத்தி பெருக்கத்தை விருத்தி செய்தல்

இத் தொடர்பு முறையை பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் நோக்கில் 2001.01.01 ஆந் திகதியிலிருந்து இவ் அமைச்சின் மூலம் வெளியிடப்படுகின்ற அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளும் மற்றைய கடிதத் தொடர்புகளும் ஈ-மேல் மூலம் மட்டும் தற்போதைக்கு அவ் வசதி ஏற்படுத்தியுள்ள நிறுவனங்களுக்கு அனுப்பப்படும். ஆகையால் இதற்காக பயன்படுத்தும் பொருட்டு உங்களது நிறுவனம் மற்றும் உங்களது நிறுவனத்தின் கீழுள்ள ஏனைய அரச நிறுவனங்கள் பயன்படுத்துகின்ற இலத்திரனியல் அஞ்சல் முகவரிகளை 2000.11.30 ஆந் திகதிக்கு முன் பின்வரும் அட்டவணையின்படி எனக்கு அறிவிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். (இத் தகவல்களை ஈ-மேல் மூலம் pubadcom@sltnet.lk முகவரிக்கு அனுப்பலாம்)

**<u>ஈ-மேல் முகவரிகள்</u>**

| நிறுவனத்தின் பெயர் | ஈ-மேல் வசதிகள் உள்ளனவா | ஈ-மேல் முகவரி |
|---|---|---|
| பிரதான நிறுவனம் | | |
| கீழுள்ள மற்றைய நிறுவனம் * | | |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

(*ஈ-மேல் வசதிகள் இல்லாவிட்டாலும் அனைத்து துணை நிறுவனங்களை இதில் குறிப்பிடவும்)

02, உங்களின் நிறுவனத்தில் அல்லது உங்களின் நிறுவனத்தின் கீழுள்ள மற்றைய நிறுவனங்களுக்கு ஈ-மேல் வசதிகள் இல்லாவிடின் அவ் வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும், அதன்படி நடவடிக்கை எடுத்து ஈ-மேல் வசதிகள் கிடைக்கப் பெற்ற உடன் புதிய ஈ-மேல் முகவரிகளையும் அனுப்பி வைக்க வேண்டும்,

03, ஈ-மேல் வசதிகள் இல்லாத அலுவலகங்களுக்கு தற்போது கையாளப்படும் முறையின்படி சுற்றறிக்கைகளும் கடிதங்களும் அச்சிட்டு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் எனினும் ஈ-மேல் வசதியுள்ள நிறுவனங்களுக்கு ஈ-மேல் மூலம் அனுப்புவதால் காலத்தையும் செலவையும் பெருமளவில் குறைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது, ஆகையால் ஈ-மேல் வசதிகளை பெறும் நிறுவனங்கள் இயன்ற விரைவில் அதுபற்றி எனக்கு அனுப்பி வைக்க வேண்டும்,

04, இது தொடர்பில் ஏதும் கஸ்டங்கள் இருப்பின் அது பற்றி உடனே எனக்கு அறிவிக்கவும்,

ஒப்பம்: எம்,என் ஜுனைட்
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு

tamil-2